பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 118 நாள்: 27.08.2016

**பெருநகர சென்னை மாநகராட்சி திட்டப்பணிகள் குறித்து
மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையாளர் மாநகராட்சி அலுவலர்களுடன் ஆலோசனை !**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் தலைமையில், ஆணையாளர், முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (27.08.2016) மாநகராட்சி பணிகள் குறித்து அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**இந்த ஆய்வுக் கூட்டத்தில் டெங்கு, மலேரியா மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் வராமல் தடுக்க அம்மா உணவகங்கள், சென்னை பள்ளிகள் மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் நிலவேம்பு குடிநீர் மற்றும் பப்பாளி இலைச் சாறு வழங்கப்படுவதை உறுதிச் செய்திட, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.**

**குடிசை பகுதி மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில், மருத்துவ முகாம் அமைத்து நிலவேம்பு குடிநீர் மற்றும் பப்பாளி இலைச் சாறு வழங்கவும் ஆலோசனை வழங்கப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. புதியதாக தார் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. குறுகலான சாலைகளை விரிவான சாலைகளாக மாற்றவும், உலகத்தரம் வாய்ந்த சாலைகள் மற்றும் நடைபாதைகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளை துரிதமாக முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

மழைநீர் வடிகால்வாய்களில் குப்பைகள் மற்றும் சகதிகளை நீக்கி தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும், தூர் வாரப்பட்ட கழிவுகளை உடனுக்குடன் சைக்கிள் வண்டி மற்றும் லாரிகள் மூலமாக அகற்றப்படவேண்டும் எனவும் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவின்.பி.நாயர் இ.ஆ.ப., மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,**